Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.318/2021

**Depositions of PW- 1**

| Name | திரு.செல்வமுருகன் | Occupation | வெல்டிங் தொழில் |
|---|---|---|---|
| Father's name | ராஜேந்திரன் | Calling | |
| Village | ராமச்சந்திராபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of May 2026.

18.05.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராமச்சந்திராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வெல்டிங் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது வீட்டு மாடியில் குடியிருந்தார். நாங்கள் 2021ம் வருடம் வீடு மாறி ராமச்சதிராபுத்திற்கு குடி சென்றோம். கடந்த 20.04.2021 அன்று காலை 09.30 மணியளவில் வேலைக்கு சென்றுவிட்டேன். பின்னர் 10.25 மணியளவில் எனது மனைவி என்னை போன்மூலம் தொடர்பு கொண்டு எனது மனைவி பக்கத்திலிருந்த கடைக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது எதிரி எங்கள் வீட்டிலிருந்து வெளியே சென்றதை பார்த்துவிட்டு உடனே வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது பீரோ திறந்துகிடந்ததாகவும் உள்ளே இருந்த பொருட்களை பார்த்தபோது பீரோவினுள் வைத்திருந்த 2 பவுன் செயின், 2 பவுன் நெக்லஸ் ஆகிய நகைகளை காணவில்லை என்றும் அதன் மதிப்பு 80 ஆயிரம் ரூபாய் என்று எனது மனைவி எனக்கு தகவல் சொன்னார். நான் உடனே எனது மாமா பாலமுருகன் என்பவருக்கு இது சம்மந்தமாக தகவல் சொன்னேன். நான் குடியிருக்கும் வீட்டு சொந்தக்காரருக்கும் இது சம்மந்தமாக தகவல் சொன்னோம். அனைவரும் சேர்ந்து எனது வீட்டின் மாடியில் குடியிருந்த ஆஜர்எதிரியிடம் விசாரித்தபோது இல்லை என்று சொன்னார். பின்னர் அவரை சோதித்து பார்த்தபோது அவரிடம்

நகைகள் இருந்தது. உடனே இது சம்மந்தமாக கிருஷ்ணன்கோவில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அந்த நகையை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள நகைகள் தான் காணாமல்போன நகைகளாகும். **நகைகளின் புகைப்படம் சாபொ.l ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.318/2021

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.தேவி | Occupation | இல்லத்தரசி |
| Husband name | செல்வமுருகன் | Calling | |
| Village | ராமச்சந்திராபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of May 2026.

18.05.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராமச்சதிராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அசா.1 எனது கணவர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது வீட்டு மாடியில் குடியிருந்தவர். கடந்த 20.04.2021 அன்று நானும் எனது குழந்தையும் வீட்டிலிருந்தபோது 10.00 மணியளவில் எனது வீட்டின் அருகிலுள்ள கடைக்கு எனது குழந்தையை தூக்கிக்கொண்டு சென்றேன். நான் கடையிலிருந்து திரும்பியபோது எதிரி எனது வீட்டிலிருந்து வெளியே வருவதை பார்த்தேன். நான் உடனே வீட்டினுள் சென்று பார்த்தபோது எனது வீட்டிலிருநத பீரோ கதவு திறந்துகிடந்தது. நான் உள்ளே இருந்த பொருட்களை சரிபார்த்தபோது அதிலிருந்த 2 பவுன் நெக்லஸ்ம், 2 பவுன் செயினும் காணாமல் போனது தெரியவந்தது. நான் இது சம்மந்தமாக எனது வீட்டுக்காரருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். உடனே அவர் அவரது மாமா மற்றும் நாங்கள் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளரும் வந்தார்கள். நான் எதிரி ஓடுவதை பார்த்ததாக சொன்னதால் அவர்கள் சேர்ந்து எதிரியிடம் விசாரித்தார்கள். எதிரி இல்லை என்று சொன்னவுடன் அவரை பரிசோதித்து பார்த்தபோது அவரது சட்டை பையில் நகை இருந்தது. பின்னர் எதிரியுடன் அனைவரும்

சேர்ந்து கிருஷ்ணன் கோவில் காவல்நிலையத்திற்கு புகார் கொடுப்பதற்காக சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.318/2021

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பாலமுருகன் | Occupation | வெல்டிங் வேலை |
| Father's name | ராமசாமி | Calling | |
| Village | ரெங்கப்பநாயக்கன்பட்டி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of May 2026.

18.05.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெங்கப்பநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது மருமகன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 20.04.2021 அன்று செல்வமுருகன் என்னை போனில் அழைத்து அசா.1ன் மனைவி 10.00 மணியளவில் கடைக்கு சென்றிருக்க திரும்பி வந்து பார்த்தபோது பீரோ திறந்துகிடந்ததாகவும் அதில் வைத்திருந்த 2 பவுன் செயினும் 2 பவுன் நெக்லஸ்ம் காணவில்லை என்றும் அசா.2 வீட்டிற்குள் நுழையும்போது எதிரி வீட்டிலிருந்து வெளியே செல்வதை பார்த்ததாகவும் என்னிடம் சொன்னார். நான் உடனே அசா.1 மற்றும் வீட்டின் உரிமையாளருடன் அவர் வீட்டிற்கு சென்று பின்னர் எதிரியிடம் விசாரித்தபோது அவர் இல்லை என்று சொன்னார். பின்னர் எதிரியை சோதனை செய்து பார்த்தபோது அவரிடம் நகைகள் இருந்தது தெரியவந்தது. நாங்கள் எதிரியுடன் காவல்நிலையம் சென்று அசா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.